# தஞ்சை சங்கை வேதநாயக சாஸ்திரியார்

தன்னை நெல்லைப்பதியான் என்று அழைக்கும் தஞ்சை சுவிசேடக் கவிராயராகிய சங்.வேதநாயக சாஸ்திரியாரை அறியாத தமிழ்க் கிறிஸ்தவர்கள் இல்லை எனக் கூறலாம்.

இவரது தந்தை தேவசகாயம் பிள்ளை தாய் ஞானப்பூ அம்மாள். இவர்களது முன்னோர் வைராக்கிய இந்துக்களாயிருந்தனர். தேவசகாயம் பிள்ளை ரோமன் கத்தோலிக்க வேதபோதக குருக்களால் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். 1774-ம் ஆண்டு புரட்டாசி 7-ம் நாள் பிறந்த தம் மகனுக்குத் தன் குரு வேத போதகம் அவர்கள் பெயரை வைத்தார். ஆனாலும் மகனை வேதநாயகம் என்றே அழைத்து வந்தார். அப்பெயரே நிலைத்து நின்றது.

சிறுவயதிலேயே வேதநாயகம் தாயை இழந்ததால் தம் பாட்டனார் வீட்டில் வளர்ந்தார். பின் மாணவப் பருவத்தில் தன் பாட்டனாரால் அறிவுருத்தப்பட்டு படிப்பில் கவனம் செலுத்தினார்.

**சுவார்ட்ஸ் ஐயரோடு அறிமுகம்**

1785-ம் ஆண்டு பாளையங்கோட்டையில் கர்னலாயிருந்த இல்லீட்டின் மனைவி கிளாரிந்தானம்மாள் மூலம் தந்தை பிரதரிக் சுவார்ட்ஸ் ஐயரிடம் சென்று சுவிசேட மார்க்கத்தில் சேர்ந்தார். தஞ்சாவூருக்கு வந்து வேத அறிவில் நன்கு திடப்பட்டு பாளையங்கோட்டைக்குத் திரும்பினார். சுவார்ட்ஸ் ஐயரின் அழைப்பை ஏற்று 1786-ம் ஆண்டு ஜனவரி மாதம் மறுபடியும் தஞ்சை வந்தார். அப்போது அவருக்கு வயது பன்னிரண்டு.

சுவார்ட்ஸ் ஐயர் முதல் முதலில் அவருக்கு சங்கீத புத்தகத்தை வாசிக்க கொடுத்தார். அதனால் இவர் கர்த்தருடைய சங்கீதக்காரனாகவும் பெயர் பெற்ற வித்துவானாகவும் திகழ முடிந்தது.

ஐயர் இவருக்கு உணவு, உடை கொடுத்து தம் மகனைப்போல ஆதரித்து வந்தார். ஐயர் தமது வீட்டிலிருந்த நல்ல பிள்ளைகளோடு சேர்ந்து ஏதாவது வேலை செய்யச் சொல்வார். பள்ளிப்பாடங்கள் போதுமென்றிராமல் காலை மாலை ஜெபத்திலும் மற்ற நேரங்களிலும் வேத காரியங்களைப் பற்றிப் பேசி, போதித்து அவர்களுக்கு அறிவூட்டினார்.